इस पुस्तिका में **24** मुद्रित पृष्ठ हैं।
This Booklet contains **24** printed pages.

www.prepp.in

# MVD18–I

परीक्षा पुस्तिका संख्या
Test Booklet No.

Prepp
Your Personal Exams Guide

LANG. CODE
**17**

## प्रश्न-पत्र—I / PAPER—I
## तमिल भाषा परिशिष्ट / TAMIL LANGUAGE SUPPLEMENT
## भाग IV & V / PART IV & V

परीक्षा पुस्तिका संकेत
**Test Booklet Code**

**I**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**

**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ संख्या 24) पर दिए गए निर्देशों को ध्यान से पढ़ें।**
**Read carefully the Instructions on the Back Cover (Page No. 24) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका की पृष्ठ संख्या 2 व 23 देखें।**
**For Instructions in Tamil, see Page Nos. 2 and 23 of this Booklet.**

### *परीक्षार्थियों के लिए निर्देश :*

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका का एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो **या** तो भाग—IV (भाषा—I) **या** भाग—V (भाषा—II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं**।
2. परीक्षार्थी भाग I, II, III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से।
3. अंग्रेजी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग—IV व भाग—V के अन्तर्गत दिए गए हैं। भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर-पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉलपॉइंट पेन** का प्रयोग करें।
5. इस भाषा पुस्तिका का **संकेत I** है। यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका का संकेत, उत्तर-पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है। अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं तथा प्रत्येक 1 अंक का है :

   भाग—IV : भाषा—I (तमिल) (प्रश्न सं० 91–120)
   भाग—V : भाषा—II (तमिल) (प्रश्न सं० 121–150)
7. भाग—IV में भाषा—I के लिए 30 प्रश्न और भाग—V में भाषा—II के लिए 30 प्रश्न दिए गए हैं। इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से सम्बन्धित प्रश्न दिए गए हैं। **यदि भाषा—I और/या भाषा—II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है/हैं, तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लें। जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन-पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए।**
8. **परीक्षार्थी भाग—V (भाषा—II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा—I (भाग—IV) में चुनी गई भाषा से भिन्न हो।**
9. रफ़ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें।
10. सभी उत्तर केवल OMR उत्तर-पत्र पर ही अंकित करें। अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें। उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है।

### *Instructions for Candidates :*

1. This Booklet is a Supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part—IV (Language—I) **OR** Part—V (Language—II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Parts I, II, III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part—IV and Part—V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ballpoint Pen only** for writing particulars on this page/marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **I**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **Two** Parts, IV and V, consisting of **60** Objective-type Questions and each carrying 1 mark :

   Part—IV : Language—I (Tamil) (Q. Nos. 91–120)
   Part—V : Language—II (Tamil) (Q. Nos. 121–150)
7. Part—IV contains 30 questions for Language—I and Part—V contains 30 questions for Language—II. In this Test Booklet, only questions pertaining to Tamil Language have been given. **In case, the language(s) you have opted for as Language—I and/or Language—II is a language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The languages being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part—V (Language—II) in a language other than the one chosen as Language—I (Part—IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) :
Name of the Candidate (in Capital letters)

अनुक्रमांक (अंकों में) :
Roll Number (in figures)

(शब्दों में) :
(in words)

परीक्षा-केन्द्र (बड़े अक्षरों में) :
Centre of Examination (in Capital letters)

परीक्षार्थी के हस्ताक्षर :
Candidate's Signature

निरीक्षक के हस्ताक्षर :
Invigilator's Signature

Facsimile Signature Stamp of Centre Superintendent

இந்த நூற்கட்டு **24** பக்கங்கள் கொண்டது.

www.prepp.in

# MVD18–I

## தாள்—I

தேற்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**I**

Prepp Your Personal Exams Guide

LANG. CODE

**17**

# தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி IV & V

அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது.

இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் **23** & **24**) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.

*தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்*

**1.** இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இந்தப் பகுதி IV (மொழி I) அல்லது பகுதி V க்கு (மொழி II) தமிழ் மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. இரண்டிற்கும் உரியது அல்ல.

**2.** தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I, II, III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV & V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.

**3.** ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.

**4.** இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை கறுப்பு/நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.

**5.** இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **I** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் பக்கம் 2-லும் அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.

**6.** இந்த தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய 60 பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.

| | | |
|---|---|---|
| பகுதி—IV | : மொழி—I (தமிழ்) | (வினாக்கள் 91 முதல் 120 வரை) |
| பகுதி—V | : மொழி—II (தமிழ்) | (வினாக்கள் 121 முதல் 150 வரை) |

**7.** பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா 30 வினாக்கள். இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி **I & II** க்கு நீர் தேர்வு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். உம் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.

**8.** தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிருந்து தேர்ந்து எடுத்துக் கொண்ட மொழி **I** (பகுதி **IV** இல்) நீங்கலாக வேறொரு மொழியை மொழி **II** (பகுதி **V** க்கு) தேர்ந்து எடுத்துக் கொண்டு விடையளிக்க வேண்டும்.

**9.** இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.

**10.** ஓ.எம்.ஆர். (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். விடைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிறமை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர் (தலைப்பு எழுத்துகளில்) : ______________________

தேர்வு வரிசை எண் (எண்ணில்) : ______________________

(எழுத்தில்) : ______________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) : ______________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் : ______________ தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் : ______________

Facsimile signature stamp of Centre Superintendent ______________________

Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் மொழி–**I** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**IV** (கே.எண். **91–120**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part–IV (Q. Nos. 91–120)**, if they have opted **TAMIL** as **Language–I** only.

Your Personal Exams Guide

# Part—IV / பகுதி—IV

## Language—I / மொழிப்பாடம்—I

## Tamil / தமிழ்

தேர்வு எழுதுவோர் மொழி–**I** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**IV** (கே.எண். **91–120**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

பின்வரும் வினாக்களுக்கு (கே.எண். **91–105** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

**91.** சொல்லெழுத்து முறையையும் நிறுத்தற்குறியிடும் முறையையும் ஒரு மாணவர் வளர்த்துக் கொள்ளும்படி கற்பிக்கப்படும் போது, அவர்கள்

(1) கற்றல் திறனைக் கூர்மையாக்கிக் கொள்கிறார்கள்.

(2) துல்லியமான அறிவை வளர்த்துக்கொள்கிறார்கள்.

(3) இலகுவான பேச்சுமுறையை மேம்படுத்திக் கொள்கிறார்கள்.

(4) தமது படைப்புத் திறனை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

**92.** கட்டமைப்பு முறை என்பது ஒரு மொழி வகுப்பில் பயன்படுத்தப்படுகிறது என்றால் அதன் பொருள் :

(1) வெவ்வேறு வகையான மாதிரிப் பாடப்பகுதிகளை மாணவர்கள் படித்து, நன்கு உறுதி செய்யப்பட்ட தீர்வைக் கண்டடைவது.

(2) மாணவர்கள் ஆசிரியர்களின் உதவியுடன் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தித் தமது கோட்பாட்டை உருவாக்குவது.

(3) தமது சொந்தமான புரிதல் திறன், உலக அனுபவ அறிவு வழி பொருள்களை அறிதல், இவற்றைப் பயன்படுத்தி தம் மொழித்திறனை வெளிப்படுத்துதல்.

(4) மாணவர்களே கற்றலுக்கான துணைக் கருவிகளை உருவாக்கி அதில் அனுபவம் பெறுதல்.

**93.** இந்தியாவின் மாநில மொழிகளை வளர்ப்பதில் பின் வருவனவற்றில் எது சவாலாக ஏற்கப்படுவதில்லை?

(1) அதனுடன் மக்களுக்கு பழக்கமின்மை

(2) உதவிக் கட்டமைப்புகள் இல்லாதது

(3) அதனைப் புரிந்துகொள்வதில் நேரும் பொருள் குழப்பம்

(4) மொழிபெயர்ப்பில் உருவாகும் சிரமங்கள்

www.prepp.in
Your Personal Exams Guide

**94.** மொழி கற்றறிவது என்பது

(1) தேவைப்பட்ட சொற்களை மட்டும் பயன்படுத்துவது.

(2) குழந்தைகள் தம் தாய்மொழியைக் கற்கும்படி சூழ்நிலைகளை ஊக்குவிக்கும் ஒரு தொழில்நுட்ப உத்தி

(3) இலக்கணத்தைப் பகுப்பாய்வு செய்து புரிந்துகொள்வதற்கான முறைப்படுத்தப்பட்ட அணுகுமுறை.

(4) மனித மூளையின் உள்ளார்ந்த திறனைப் பயன்படுத்தி ஒரு மொழியைக் கற்கும் செயல்பாடு.

**95.** எழுத்துத் திறனைக் கற்பிக்க ஒரு மொழி ஆசிரியர் இதனைப் பயன்படுத்த முடியும் :

(1) சொல்வதெழுதுதல்

(2) குழந்தைகளைத் தெளிவாக எழுதச் சொல்லுதல்

(3) துரிதமான சிந்தனை முறையில் கருத்துக்களை உருவாக்கி மாணவர்களைத் தம் சொந்தமான சொற்களில் அவற்றை எழுத வைத்தல்

(4) குறிப்புடைச் சார்புச் சொற்களைக் கற்கும்படி மாணவர்களில் சொல்லுதல்

**96.** இலகுவான மொழிப்பயன்பாட்டுத் திறனை வளர்க்க பயன்படுவது:

(1) மாணவர்களுடன் உரையாடுவது

(2) புரிந்துகொள்ள முடியாத மாணவர்களை அமைதியாக உட்கார்ந்திருக்க அனுமதிப்பது

(3) அந்த அந்த நேரத்திலேயே பிழைகளைச் சுட்டிக் காட்டி திருத்தம் செய்தல்

(4) கருத்துப் பரிமாற்றத்திற்கு மொழியைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருதல்

**97.** மொழியைக் கற்பிப்பதற்கான மிகுந்த பயனுடைய பாடம் இதில் தொடங்குகிறது :

(1) கற்றலுக்கான பயன் நோக்கத்தைப் பட்டியலிடுதல்.

(2) பின்னூட்டம் அளித்து செய்முறைப் பயிற்சியில் ஈடுபட மாணவர்களை ஊக்கப்படுத்துதல்.

(3) பாடப்பகுதியின் பின்புலத்தை விளக்குதல்.

(4) கரும்பலகையில் எழுதுதல்.

www.prepp.in
Your Personal Exams Guide

**98.** குறைதீர்க்கும் கற்பித்தல் முறை என்பது _____ செயல்பாடு.

(1) நெறிப்படுத்தும்

(2) வழிசொல்லிக் கொடுக்கும்

(3) எதிர்மறை

(4) கோட்பாட்டு முறை

**99.** மொழித் திறன் இதன் வழி கற்பிக்கப்பட வேண்டும் :

(1) தெளிவான விளக்கம் வழியாக

(2) தனித்த ஒரு செயல் வழியாக

(3) ஒருங்கிணைந்த முறையில்

(4) போலச் செய்தல் முறையின் மூலம்

**100.** மொழி கற்கும் போது மாணவர்களுக்குத் தம் உச்சரிப்பு முறையின் மீது நம்பிக்கைக் குறைவாக இருக்கிறது. இதனை ஒருவர் எவ்வாறு சரி செய்து கொள்ளலாம்?

(1) வகுப்பறையில் குரல்விட்டு வாசிப்பது.

(2) குழந்தைகள் ஒருவருடன் ஒருவர் பேசிக் கொள்ளும் படியான விளையாட்டுச் செயல்பாட்டை ஏற்பாடு செய்வது.

(3) பேசும் போதே பிழைகளைத் திருத்திச் சொல்வது.

(4) மொழி வல்லுநர்கள் உதவியுடன் சிறப்புப் பயிற்சிச் செயல்பாடுகளை அமைப்பது.

**101.** ஒரு வினாத்தாளை தயாரித்த பின் ஆசிரியர் தேர்வு நோக்கங்களைச் சரிபார்க்கிறார். கேள்வித்தாளின் எந்தப்பகுதி பற்றி ஆசிரியர் இங்கு முதன்மையான அக்கறையைக் காட்டுகிறார்?

(1) அதில் உள்ள உள்ளடக்க அளவு

(2) கேள்விகளின் வகைகள்

(3) நம்பகத் தன்மை

(4) மதிப்புத் தன்மை

102. வாசிப்பில் நேரும் கடினத்தன்மையின் அடையாளம் என இந்தக் கடினத் தன்மையை, [illegible]க் கூற முடியாது :

www.prepp.in

Prepp Your Personal Exams Guide

(1) எழுத்து, சொல்லை அடையாளம் காண முடியாமை

(2) தொடர் ஒழுங்குடன் சொல்லை உச்சரிக்க முடியாமை

(3) விரைவாகவும், சரளமாகவும் வாசிக்க முடியாமை

(4) சொற்களையும் அதன் கருத்துக்களையும் புரிந்துகொள்ள முடியாமை

103. மொழியின் இயல்பு பற்றிய பின்வரும் கருத்துகளில் உண்மையற்றது எது?

(1) ஒவ்வொரு மொழியும் அதற்கான அமைப்பொழுங்கைக் கொண்டுள்ளது.

(2) மொழி பண்பாடு மற்றும் நாகரிகத்துடன் தொடர்புடையது.

(3) எளிய வடிவிலிருந்து சிக்கலான அமைப்புக்கு மொழி நகர்கிறது.

(4) மொழி தொகுத்தறியும் முறையிலிருந்து பகுத்தாய்வு முறைக்குச் செல்கிறது.

104. பேச்சு மொழி வளர்ச்சிக்கு உதவிசெய்யும் வகுப்பறை பயிற்சி முறை எது?

(1) பாட நூலில் உள்ள பகுதியை ஆசிரியரும் மாணவர்களும் ஒன்றிணைந்து படித்தல்.

(2) சொற்களின் சரியான உச்சரிப்பு முறையைக் கூட்டாகப் பயிற்சி செய்வது.

(3) கவிதைகளை மனப்பாடம் செய்து தனித்தனியாக ஒப்பித்தல்.

(4) விருப்பப்பட்ட கதைகளில் உள்ள பாத்திரங்களை ஏற்று பேசி நடித்துக் காட்டுதல்.

105. துரித வாசிப்பின் நோக்கம்

(1) ஆர்வத்தைத் தூண்டுவது

(2) குறிப்பிட்ட தகவலைத் தெரிந்துகொள்வது

(3) விரிவான வாசிப்பு

(4) தகவல் பகுதியைத் தேடுவது

**கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண். 106–114 வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :**

www.prepp.in

மனிதன் மிகப் மழைய காலத்திலே காட்டு வாழ்க்கை வாழ்ந்தான். இருக்க வீடும், உடுக்க உடையும், உண்ண உணவும் உண்டாக்கிக்கொள்ளத் தெரியாமல் அக்காலத்திலே மனிதன், விலங்குபோல அலைந்து திரிந்தான். பிறகு அவன் மெல்லமெல்ல சிறிது சிறிதாக நாகரிகம் அடைந்தான். வசிக்க வீடும், உடுக்க உடையும், உண்ண உணவும் உண்டாக்கிக்கொள்ளத் தெரிந்து கொண்டான். இதனால் அவன் மிருக வாழ்க்கையிலிருந்து விலகி நாகரிக வாழ்க்கை பெற்றான். ஆனால், மனிதன் நாகரிக வாழ்க்கை அடைவதற்குப் பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்தன. மனிதன் நாகரிகம் பெறுவதற்குப் பேருதவியாக இருந்தவை அவன் சிறிது சிறிதாகக் கற்றுக்கொண்ட பலவகையான தொழில்களேயாகும். ஒவ்வொரு தொழிலையும் கற்றுத் தேர்வதற்கு அவனுக்குப் பல நூற்றாண்டுகள் கழிந்தன. மனிதனுடைய நல்வாழ்விற்கு உதவுகிற எல்லாத் தொழில்களையும் கலைகள் என்று கூறலாம். தச்சுவேலை, கருமாரவேலை, உழவு, வாணிபம், நெசவு, மருத்துவம் முதலிய தொழில்கள் யாவும் கலைகளே. பண்டைக் காலத்திலே நமது நாட்டிலே அறுபத்துநான்கு கலைகள் இருந்தன என்று மணிமேகலை முதலிய நூல்கள் கூறுகின்றன.

அக்காலத்தில் அறுபத்துநான்கு கலைகள் இருந்தன என்றால், பல துறையிலும் நாகரிகம் பெருகியுள்ள இந்தக் காலத்திலே கலைகளின் எண்ணிக்கை மிகமிகப் பெருகியிருக்கிறது என்பதில் ஐயம் இல்லை. நாம் இங்கு ஆராயப் புகுவது இந்தப் பொதுக் கலைகளைப்பற்றி அன்று. இப்பொதுக் கலைகளுக்கு வேறுபட்ட அழகுக் கலைகளைப் பற்றித்தான் ஆராய்ச்சி செய்யப்போகிறோம். பலவகையான தொழில்களில் வளர்ச்சியும் தேர்ச்சியும் அடைந்து, தனது வாழ்க்கைக்கு வேண்டிய உணவு, உடை, உறையுள், கல்வி, செல்வம் முதலியவையும் பெற்று நாகரிகமாக வாழ்கிற மனிதன், இவற்றினால்மட்டும் மனவமைதி அடைகிறதில்லை. நாகரிகமாக வாழும் மக்கள் உண்டு, உடுத்து. உறங்குவதனோடு மட்டும் திருப்தியடைவதில்லை. அவர்கள் மனம் வேறு இன்பத்தை அடைய விரும்புகிறது. அந்த இன்பத்தைத் தருவது எது? அழகுக்கலைகளே. நாகரிக மக்கள் நிறை மனம் அடைவதற்குத் துணையாயிருப்பவை அழகுக் கலைகள்தாம். அழகுக் கலைகள் மனிதனுடைய மனத்திற்கு அழகையும் இன்பத்தையும் அளிக்கின்றன. அழகுக் கலைகளின் வாயிலாக மனிதன் நிறைமனம் அடைகிறான். அழகுக் கலைக்கு இன்கலை என்றும், கவின்கலை என்றும், நற்கலை என்றும் வேறு பெயர்கள் உண்டு.

**106.** மனிதர்கள் விலங்குபோல அலைந்து வாழ்ந்த காலத்தில் அவர்களிடம் இல்லாத அறிவு என இதனைக் கூறலாம்:

(1) கலைகளைப் படைக்கும் அறிவும், கவின் கலை உருவாக்கும் அறிவும்

(2) இருக்க வீடு, உடுக்க உடை, உண்ண உணவு உருவாக்கும் அறிவு

(3) காடுகளில் விலங்குகள் போல வாழும் அறிவு

(4) தொழில்களை வளர்த்து கலைகளைப் படைக்கும் அறிவு

**107.** மனித நாகரிக வாழ்க்கையின் அடிப்படையாக அமைந்த அறிவு இவற்றுடன் தொடர்புடையது?

(1) உணவு உருவாக்குதல், உடை அணிதல், உறையுள் ஏற்படுத்தல்

(2) உணவு தேடுதல், உறங்குதல், ஊர்வழி வாழ்தல்

(3) உடை உடுத்தல், உழவு செய்தல், உயர் தொழில் நுட்பம்

(4) அறுபத்து நான்கு கலைகள், அவற்றுடன் தொடர்புள்ள தொழில்கள்

**108.** கலைகள் என்பவற்றை இவ்வாறு கூறலாம் :

www.prepp.in

Your Personal Exams Guide

(1) தேர்ந்த தொழில் திறம்

(2) நூற்றாண்டுகள் வாழ்வதற்கான முறை

(3) மனித நல்வாழ்விற்கு உதவும் தொழில்கள்

(4) சிறிது சிறிதாகக் கற்கும் தொழில்கள்

**109.** பல துறைகள் பெருகும் போது :

(1) மனித வாழ்க்கை தடைபெறுகிறது

(2) கலைகளின் எண்ணிக்கை மிகப்பெருகுகிறது

(3) கலைகள் அழகுக் கலைகளாக மாறுகிறது

(4) தொழில் வளர்ச்சி தேர்ச்சி பின்னடைகிறது

**110.** தொழில்கள் _____ நிறைவேற்றுகின்றான, கலைகள் _____, _____ அளிக்கின்றன.

(1) மனதின் தேவைகளை, இன்பம், அறிவு

(2) அறிவின் தேவைகளை, மனம், உணர்வு

(3) அழகுணர்வை, அறிவு, தெளிவு

(4) வாழ்வின் தேவைகளை, அழகையும் இன்பத்தையும்

**111.** கலைகளை இப்பாடப்பகுதி பின்வரும் வகையில் பகுத்துப் பெயரிட்டுள்ளது :

(1) பொதுக்கலைகள், அறுபத்து நான்கு கலைகள்

(2) பொதுக்கலைகள், அழகுக்கலைகள், இன் கலைகள், கவின்கலைகள், நற்கலைகள்

(3) மனம் சார் கலைகள், தொழில்சார் கலைகள், அழகுக் கலைகள்

(4) இன்கலைகள், அழகுக் கலைகள், தொழிற்கலைகள்

**112.** நிறை மனம் அடையத் துணையாக உள்ளவை அழகுக் கலைகள். நிறை மனம் முற்றுபெறாத [illegible]ன எவை குறிப்பிடப்படுகிறது?

www.prepp.in
Prepp Your Personal Exams Guide

(1) வேறு இன்பம், வேறு அறிவு

(2) உடல் தேவை, உயர் வாழ்க்கை

(3) உணவு, உடை, உறையுள், கல்வி, செல்வம்

(4) வேறு வாழ்க்கை, முழு இன்பம், கலை இன்பம்

**113.** பின் வருவனவற்றில் தொடர்புடைய படிநிலை வளர்ச்சியைக் குறிப்பிடுக. பாடப்பகுதியின் அடிப்படைக் கருத்துடன் அது பொருந்துகிறது.

(1) தெரிதல், கற்றல், தேர்தல், வளர்தல்

(2) ஆராய்ச்சி, விருப்பம், மனவமைதி

(3) இருத்தல், பெருகுதல், நிறைமனம்

(4) அழகு, இன்பம், மன அமைதி

Prepp Your Personal Exam Guide

**114.** இப்பாடப் பகுதியில் எண்களுடன் இணைந்த தொடர்கள் ______ அமைந்துள்ளன. அவை ______

(1) மூன்று / வீடு, உடை, உணவு

(2) இரண்டு / நூற்றாண்டுகள், அறுபத்து நான்கு கலைகள்

(3) ஆறு / தச்சு வேலை, கருமாரவேலை, உழவு, வாணிபம், நெசவு, மருத்துவம்

(4) நான்கு / அழகுக்கலை, இன்கலை, கவின்கலை, நற்கலை

கொடுக்கப்பட்டுள்ள கவிதையைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண். 115–120 வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க:

www.prepp.in
Prepp Your Personal Exams Guide

விடுதலைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவம் என்றே
திடமனத்தின் மதுக்கிண்ண மீது
சேர்ந்து நாம் பிரதிக்கினை செய்வோம்.
உடையவள் சக்தி ஆண் பெண்ணிரண்டும்
ஒரு திகர்செய் துரிமை சமைத்தாள்.
இடையிலே பட்ட கீழ்நிலை கண்டீர்,
இதற்கு நாமொருப் பட்டிருப் போமோ?

திறமையால் இங்கு மேனிலை சேர்வோம்;
தீய பண்டை இகழ்ச்சிகள் தேய்ப்போம்;
குறைவிலாது முழுநிகர் நம்மைக்
கொள்வ ராண்க ளெனில வரோடும்
சிறுமை தீர நந்தாய்த்திரு நாட்டைத்
திரும்ப வெல்வதில் சேர்ந்திங் குழைப்போம்;
அறவி முந்தது பண்டை வழக்கம்;
ஆணுக்குப் பெண் விலங்கெனும் அஃதே.

**115.** சக்தி சமைத்தது எது?

(1) வெல்லுவம் என்ற திடமனம், வேட்கை

(2) ஆண் பெண் இரண்டும் ஒருநிகரான நிலையுடன் கூடிய உரிமை

(3) இடைநிலையில் இருவகைக் கீழ்நிலை

(4) விடுதலை பெற்ற மகளிர்

**116.** எதன் மீது ஆணையிட்டு வெல்லுவம் என்றனர் மகளிர்?

(1) திடமனம் என்ற மதுக்கிண்ணம்

(2) வேட்கை கொண்ட மனம்

(3) நிகர் செய்த உரிமை

(4) மதுக்கிண்ணம் என்ற உவமை மீது

**117.** எதற்கு ஒப்புக் கொண்டு இருக்கக்கூடாது எனப் பாடல் கூறுகிறது?

www.prepp.in

Your Personal Exams Guide

(1) மனதின் வேட்கை, திடமனம்

(2) நிகர் கொண்ட உரிமை

(3) உரிமை நிகர்வு அற்ற, இடையில் உற்ற கீழ் நிலை

(4) திறமையால் சேர்ந்த மேனிலை

**118.** சேர்வது இது : _____ தேய்ப்பது இது : _____

(1) குறைவிலா முழுமை, சிறுமை தீர உழைத்தல்

(2) திறமையால் மேல் நிலை, தீமை நிறைந்த பண்டைய இகழ்ச்சிகள்

(3) பண்டைய வழக்கம், குறைவிலா முழுமை

(4) நிகர் செய்து உரிமை, முழுநிகர் வழக்கம்

**119.** தாய்த்திருநாட்டைத் திரும்ப வெல்வதில் சேர்ந்து உழைக்கப் பெண்கள் முன்வைக்கும் கோரிக்கை என்ன?

(1) உரிமை குறைவு படாது முழுமையானச் சமநிலையுடன் ஆண்கள் பெண்களை ஏற்க வேண்டும்

(2) திறமையும், உரிமையும் பெண்களுக்கு அளிக்க வேண்டும்

(3) பண்டை வழக்கம் விழுந்து மேனிலை பெற வேண்டும்

(4) தாய்த்திருநாட்டை ஆள உரிமை அளிக்க வேண்டும்

**120.** விழுந்து முழுமையாக மறைய வேண்டிய பழமை வழக்கம் :

(1) சிறுமை தீர்ந்த சிறப்பு என்னும் எண்ணம்

(2) தீய இகழ்ச்சிகள் குறையலாகாது எனும் கருத்து

(3) பெண் ஆணுக்குத் தலையாக இருப்பதான பழமை நம்பிக்கை

(4) பெண்ணும் ஆணும் விலங்கு நிலையில் வைக்கப்படுதல்

prepp Your Personal Exams Guide

தேர்வு எழுதுவோர் மொழி–**II** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**V** (கே.எண். **121–150**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part–V (Q. Nos. 121–150)**, if they have opted **TAMIL** as **Language–II** only.

www.prepp.in

# Part—V / பகுதி—V

## Language—II / மொழிப்பாடம்—II

## Tamil / தமிழ்

தேர்வு எழுதுவோர் மொழி–**II** இல் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி–**V** (கே.எண். **121–150**) க்கான விடைகளைத் தரவேண்டும்.

பின்வரும் வினாக்களுக்கு (கே.எண்.**121–135** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

**121.** தொடக்கப் பள்ளி மாணவர்களிடம் கவனித்தறிதல், மற்றும் பேச்சுத் திறனை வளர்க்க பின் வருவனவற்றில் எந்த உத்தி முறை மிகவும் பயனுடையதாக உள்ளது?

(1) கதை சொல்லுதல் மற்றும் சொல்வதெழுதுதல்

(2) கவிதை ஒப்புவித்தல் மற்றும் மொழிச்செயல் ஆய்வுக்கூட முறை

(3) பாத்திரம் ஏற்று நடித்தல் மற்றும் செய்தி வாசித்தல்

(4) பாத்திரம் ஏற்று நடித்தல் மற்றும் உரையாடல் பரிமாற்றம்

**122.** குறைநீக்கல் முறை கற்பித்தல் மொழிக்கல்வியில் இந்த நோக்கத்தைக் கொண்டது

(1) மாணவர்களிடம் தொடக்க நிலை பிழைகளைச் சரி செய்வது

(2) அறிவுடன் தொடர்புடைய பிழைகளைச் சரி செய்வது

(3) மாணவர்களின் தன்னம்பிக்கையை மேம்படுத்துவது

(4) இவை அனைத்தும்

**123.** மொழிபற்றிய பொதுவான புரிதலை மதிப்பீடு செய்வதற்கு உகந்த கேள்விகள் எவ்வகையில் அமைய வேண்டும்?

(1) மிகக் குறுகிய விடை வகை

(2) விரிவான விடையளித்தல் வகை

(3) கட்டுரை எழுதுதல் வகை

(4) தேர்ந்தெடுத்தல் வகை

**124.** ''குழந்தைகள் உள்ளார்ந்த மொழித்திறனுடன் பிறந்திருக்கிறார்கள்''. இதனைச் சொன்னவர் யார்?

(1) ஜூன் பியஜேட் (ழீன் பியாஜே)

(2) சோம்ஸ்கி

(3) விகோட்ஸ்கி

(4) பாவ்லோவ்

**125.** ஹிந்தி பேசும் ஒரு மாநிலத்திலிருந்து உங்கள் பகுதிக்கு ஒரு மாணவர் வருகிறார். உங்கள் மொழியைப் பயன்படுத்தும் போது அவர் பிழைகளைச் செய்கிறார். ஒரு ஆசிரியராகப் பின் வருவனவற்றில் எந்த கருத்தைச் சரியென ஏற்பீர்கள்?

(1) அவர் செய்யும் பிழைகளை மீண்டும் மீண்டும் நினைவூட்ட வேண்டும்

(2) மொழியைப் பயன்படுத்த அதிக வாய்ப்புகளே அவருக்குத் தரவேண்டும்

(3) புதிய மொழியைத் தினம் அரை மணி நேரம் பேச வேண்டும் என்று அவருக்குச் சொல்லலாம்

(4) புதிய மொழியில் அவருடைய தாய் மொழியின் தாக்கம் ஏற்படுவதை அனுமதிக்காமல் பார்த்துக் கொள்ளலாம்

**126.** பின் வருவனவற்றில் எந்த நோக்கத்திற்காக மொழி கற்கப்படக் கூடாது?

(1) வாழ்வின் பல்வேறு கட்டங்களை அறிவது

(2) மொழிப்புரிதல் திறனைக் கற்பது

(3) மனதின் உள்குரலை சொல்வதும் கேட்பதும்

(4) வாழ்வின் வெவ்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்வது

**127.** மொழிக் கல்வியில் கட்டுரை எழுதுதல் தேர்வு நடத்துவதால் உருவாகும் நன்மை எது?

(1) குழந்தையின் எண்ணங்களை ஒருங்குபடுத்தி எழுத்து வடிவில் கொண்டுவரும் திறனை மதிப்பிட உதவுகிறது

(2) மாணவர்கள் தேர்வில் வரும் மிகச்சில கேள்விகளை மட்டும் கற்க அது உதவமுடியும்

(3) மாணவர்கள் மிகச்சில கேள்விகளுக்கு மட்டும் விடையெழுத முயல வேண்டும், அதன் மூலம் கற்பதற்கான கால அளவைச் சேமிக்கலாம்

(4) முழு பாடத்திட்டத்தையும் அது உள்ளடக்க முடியும்

**128.** சிறப்புத் தேவைகளைக் கொண்ட குழந்தைகள் எழுத்துத் திறனை வளர்க்க தேவையான பயிற்சி முறை :

(1) சிந்தனையில் தனித்தன்மை சுயத்தனமை

(2) குறியீட்டு மொழியைப் பயன்படுத்தல்

(3) சரியான சொல் வடிவங்களைப் பயன்படுத்துதல்

(4) நல்ல கையெழுத்து

**129.** மொழிக்கல்வியில் தொடர்ச்சியான, புரிதல் முறை மதிப்பீடு செய்யும்போது எதற்கு முன்னுரிமை தரவேண்டும்?

(1) சரியான சொல்லாட்சி

(2) பாடத்திட்ட ஆய்வு என்னும் புராஜெக்ட்

(3) சரியான சொல் உச்சரிப்பு

(4) வெவ்வேறு பின்புலச் சூழலில் மொழியைப் பயன்படுத்தும் திறன்

www.prepp.in
Your Personal Exams Guide

**130.** பன்மொழித் தன்மை :

(1) மொழி கற்பித்தலில் தடை

(2) மொழி வளத்திற்கு ஆபத்து

(3) மொழி கற்றலுக்கு முக்கியமான ஒரு ஆதாரம்

(4) மொழி கற்றலில் பிரச்சினையை ஏற்படுத்துகிறது

**131.** மொழியின் தொடக்க கட்ட வடிவம்

(1) குறியமைப்பு மொழி (சைன் லாங்வேஜ்)

(2) இலக்கணம்

(3) எழுத்து மொழி

(4) பேச்சு மொழி

**132.** தொடக்கக் கல்வியில் கதைகள் மற்றும் கவிதைகளில் எந்தக் கூறுகள் மிக முக்கியமாக இடம் பெற வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

(1) மதிப்பீடுகளை மையப்படுத்தியதாக அவை இருக்க வேண்டும்

(2) சொல் வளம் அதிகமாக உள்ள கதைகள், கவிதைகள் அமைய வேண்டும்

(3) முக்கியமான பெயர்களும், சம்பவங்களும் அதில் மீண்டும் மீண்டும் இடம் பெற வேண்டும்

(4) முக்கியமான எழுத்தாளர்களின் கவிதைகள், கதைகள் இடம் பெற வேண்டும்

**133.** மொழிக் கல்வியில் இலக்கணத்தைக் கற்பிப்பது இதனை வளர்க்க உதவுகிறது :

(1) துல்லியமான மொழித்திறன்

(2) இலகுவாக மொழியைப் பயன்படுத்தும் திறன்

(3) எண்ணிக்கை அறிவு

(4) எழுத்தறிவு

**134.** எழுதுதல் முறையின் மரபு வழக்குகள் இதனை உள்ளடக்கி உள்ளன :

(1) கதைக்கான கருத்துகள்

(2) கற்பனை

(3) முறையான நிறுத்தற் குறிகள்

(4) நல்ல சொல்வளம்

**135.** மொழிக் கல்வியில் மதிப்பீடு செய்வது இந்த நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்க வேண்டும்

(1) மாணவர்களின் பிழைகளைக் கண்டறிவது

(2) மாணவர்கள் மேல் வகுப்புச் செல்வதற்கான திறனைக் கண்டு முடிவு செய்வது

(3) மாணவர்களின் சாதனைத் திறனை அளவிடுவது

(4) கற்றலில் நேரும் இடைவெளிகளைக் கண்டறிந்து அதற்கான தீர்வுகளைத் தருவது.

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண். 136–143 வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

www.prepp.in prepp Your Personal Exams Guide

புத்தருடைய சமயம் அருள் மயமானது. அதில் சாதிகள் இல்லை; ஏற்றத் தாழ்வுகள் இல்லை; யாரும் சேரலாம். சமயங்களிலே அது ஒரு குடியரசு எனலாம். சுயநலத்தை ஒழித்து, ஆசைகளையும் வெறுப்புக்களையும் அகற்ற வேண்டும்; உள்ளத்தில் எல்லா உயிர்களிடத்தும் அன்பு மலர்ந்து பரிமளிக்கச் செய்ய வேண்டும்; ஒழுக்கம் என்னும் உறுதியான பாறைமீது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்; மெய்யறிவின் மூலம் அறியாமையைப் போக்க வேண்டும்; அறியாமை போனால் ஆசை ஒழியும்; ஆசை ஒழிந்தால் பிறவியும் ஒழியும்; நிலையான நிருவாணப் பேறு கிடைக்கும் இதுவே பௌத்த தருமம் மக்களுக்குக் காட்டிய வழி.

புத்தர், துக்கம், துக்க காரணம், துக்க நிவிர்த்தி, துக்க நிவிர்த்தி வழி என்று கூறியவைகள் 'நான்கு வாய்மைகள்' எனப்படும். துக்க நீக்கத்திற்கு அவர் கூறிய மார்க்கம் எட்டுப்படிகளுள்ள 'அஷ்டாங்க மார்க்கம்' என்பது. நற்காட்சி, நல்லூற்றம், நல்வாய்மை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நல்லூக்கம், நற்கடைப்பிடி, நல்லமைதி என்றவையே அந்த எட்டுப்படிகள். மனிதன் திடீரென்று தீயோனாவதுமில்லை; நல்லவனாவது மில்லை; பலநாள், பல வருடப் பழக்கத்தினாலேயே அவன் குணம் அமைகிறது. எனவே ஆசை அழிந்து, அறியாமை நீங்கி, மெய்யறிவு பெறுவதற்கு மேற்கூறிய எட்டுப்படிகளும் பயிற்சி நிலையங்களாக அமைந்துள்ளன. மனம், மொழி, மெய்களில் தூய்மை, நியாயமான வாழ்க்கை முறை கருத்துடைமை, இடைவிடாத ஊக்கம்-இவைகளின் உதவியால், சந்தேகம், மயக்கம் இல்லாத அறிவு பெற்றுத் தியானம், சமாதி மூலம் மெஞ்ஞானத்தையும் முடிவில் நிருவாண முக்தியையும் பெறடியும்.

புத்தர் அருளிய அறவுரைகளும், சங்கவிதிகளும், அவரைப்பற்றிய வரலாறுகளும் பௌத்தத் திருமுறைகளில் மூன்று பிரிவான தொகுதிகளாக உள்ளன. அவைகளுக்கு. திரிபிடகங்கள் என்று பெயர். அவை விநய பிடகம், சுத்த பிடகம், அபிதம்ம பிடகம் என்பவை. தம்ம பதம் என்ற இந்நுல் சுத்த பிடகத்திலுள்ள ஐந்து பகுதிகளில், குத்தக நிகாயம் என்ற பகுதியிலுள்ளது.

தம்ம பதத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய நூல் தமிழ் மறையாகிய திருக்குறள். இது நமது மொழியிலுள்ள திருவள்ளுவரது திருக்குறளைப் போன்று அத்துணைச் சிறப்பு வாய்ந்தது. தமிழ் நாட்டில் ஆயிரம் ஆண்டுகட்கு மேலாகப் பௌத்தசமயம் நிலைத்து வளர்ந்து செழித்திருந்தது. தமிழர் புத்தரைத் தயா வீரன், தரும ராஜன், அருளறம் பூண்டோன், அறத்தகை முதல்வன், புத்த ஞாயிறு, போதி மாதவன், மன்னுயிர் முதல்வன், பிறவிப்பிணி மருத்துவன் என்று பலபடப் புகழ்ந்து போற்றி வந்திருக்கின்றனர். தமிழ் நாடெங்கும் பௌத்தப்பள்ளிகள் நிறைந்திருந்தன. காஞ்சீபுரம், நாகைப்பட்டினம், மதுரை முதவிய பெருநகரங்களிலெல்லாம் பௌத்தம் நிலைபெற்றிருந்தது.

**136.** புத்தருடைய சமயத்தைக் குடியரசு என்பதற்கான அடிப்படைக் காரணங்கள் :

(1) அதில் சேர சில தகுதிகள் உள்ளன. ஏற்றத் தாழ்வு ஒரளவு உண்டு

(2) அது அருள்மயமானது; அதில் சாதிகள் இல்லை; ஏற்றத் தாழ்வு இல்லை; யாரும் சேரலாம்

(3) சுயநலம் அற்றது; வெறுப்புகள் அற்றது; மெய்யறிவு உடையது

(4) அறியாமை அற்றது; ஆசை ஒழிந்தது; பிறவிப்பயன் அற்றது

**137.** மெய்யறிவு சேர .................... போகும். அதனால் ..................... ஒழியும்; அதன் வழி ..........
www.prepp.in கிடைக்கும்

(1) அறியாமை, ஆசை, நிருவாணப் பேறு

(2) ஆசை, அறியாமை, பிறவிநிலை

(3) பிறவி நிலை, ஆசை, தருமம்

(4) அறியாமை, நிருவாணப் பேறு, ஆசை

**138.** அகற்ற வேண்டியது ................. பரிமளிக்க வேண்டியது .......................... .

(1) அருளும் ஒழுக்கமும், அறியாமையும் ஆசையும்

(2) அறிவும் பிறவியும், வெறுப்பும் ஒழுக்கமும்

(3) ஆசையும் வெறுப்பும், உயிர்களிடத்து அன்பு

(4) சாதியும் சமயமும், ஒழுக்கமும் அறிவும்

**139.** மலராக உவமிக்கப்படுவது .......... உறுதியான பாறை எனச் சுட்டப்படுவது ......................

(1) பிறவி; மெய்யறிவு

(2) சமயம்; அருள்

(3) அறியாமை; நிருவாணப் பேறு

(4) உயிர்களிடம் கொண்ட அன்பு; ஒழுக்கம்

**140.** நான்கு வாய்மைகள் என புத்தர் உரைத்தவற்றை மிகச் சுருக்கமாக இவ்வாறு கூறலாம். மிகப் பொருத்தமானதைத் தேர்ந்தெடுக்க.

(1) துயரம் அற்ற வாழ்க்கை, துயரம் நீக்கும் வழி, துயரத்திற்கான காரணம் மற்றும் துயரம்

(2) வாழ்வு துயரம் கொண்டது, அதற்கான காரணம் உள்ளது, அதனை நீக்க இயலும், நீக்கு வதற்கான வழி உள்ளது

(3) துயரம் அற்ற வாழ்வு, துயரம் நீக்கும் வழி, துயரத்திற்கான காரணம் துயரம் நீக்கும் முறை

(4) நற்காட்சி, நல்லமைதி, நற்செய்கை, நல்வாழ்வு

**141.** மனிதர்களிடத்து நிகழும் தீமையைப் பற்றி பொருத்தமான வாக்கியத்தைக் காண்க.

www.prepp.in
Your Personal Exams Guide

(1) தீமை இயல்பில் வருவதில்லை, பழக்கத்தினால் குணம் அமைகிறது, பயிற்சியினால் தீமை நீக்கி நன்மை அடையாலாம்

(2) நன்மையும் தீமையும் இயல்பாய் அமைவது, பயிற்சியினால் தீமையை அறியலாம்

(3) தீமை இயல்பில் வருவதில்லை, பழக்கத்தினால் தீமை உருவாகிறது, பயிற்சியினால் அது நன்மையாக மாறுவதில்லை

(4) நன்மைக்கும் தீமைக்கும் மனம், மொழி, ஊக்கம் இவையே காரணமாகிறது

**142.** பின் வருவனவற்றில் சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுக்க

(1) பௌத்தத் திருமுறைகள் மூன்று; அதில் ஒன்று தம்ம பதம் அதில் ஐந்து பகுதிகள் உள்ளன

(2) பௌத்தத் திருமுறைகள் மூன்று, அதில் ஒன்று சுத்த பிடகம், சுத்தபிடகம் ஐந்து அதில் ஒன்று குத்தக நிகாயம், தம்மபதம் அதில் ஒன்று

(3) சங்க விதிகள் திரிபிடகம் எனப்படும், தம்ம பதம் குத்தக நிகாயத்தில் உள்ளது, குத்தக நிகாயம் அபிதம்ம பிடகம் எனப்படும்

(4) அபிதம்மம், குத்தக நிகாயம் இரண்டும் சுத்த பிடகம் எனப்படும் அதில் ஐந்து பகுதிகள் அடங்கும்

**143.** பௌத்தம் தமிழ் நாட்டில் நிலைத்திருந்ததற்குச் சான்றாகக் காட்டப்பட்டுள்ளனவற்றை இவ்வாறு வகைப்படுத்தலாம் : சரியானதைத் தேர்க.

(1) புத்தரை வீரன், ராஜன், முதல்வன், மாதவன், மருத்துவன் எனப் போற்றியது

(2) காஞ்சீபுரம், நாகைப்பட்டினம், மதுரை என்ற நகரங்களில் பௌத்தப்பள்ளிகள் இருந்தன

(3) திருக்குறளுக்கும் தம்மபதத்திற்கும் உள்ள உறவு, புத்தருக்கு வழங்கப்பட்ட தமிழ்ப் பெயர்கள், தமிழகத்தில் இருந்த பௌத்தப் பள்ளிகள்

(4) பௌத்தத்தின் சிறப்பு, திருக்குறள் சிறப்பு, புத்தரைப் போற்றுதல்

கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு (கே. எண். **144–150** வரை) மிகப்பொருத்தமான விடைகளைத் தேர்வு செய்க :

www.prepp.in
prepp Your Personal Exams Guide

மணிமேகலை என்னும் இவ் அணிகெழுநூல், ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்று. இது சொன்னயம் பொருள்நயம் மிக்க விழுமிய நூலாகும். அதன் உரையாசிரியர் பேராசிரியரால், ''சீத்தலைச் சாத்தனாரால் செய்யப்பட்ட மணிமேகலையும், கொங்குவேளிரால் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன'' என்று பாராட்டிக் கூறுதலானும், பிற்காலச் செஞ்சொற்புலவராக மிளிர்ந்த துறைமங்கலம் சிவப்பிகாச அடிகளால் ''கொந்தார் குழல்மணிமேகலை நூல்நுட்பம் கொள்வதெங்ஙன்'' என்று சிறப்புக்காட்டிச் சொல்வதானும், அம்பிகாபதி என்னும் ஆசிரியரால் மாதவி பெற்ற மணிமேகலை நம்மை வாழ்விப்பதே என்று நயம் பெறக் கூறப்பெறுதலானும் இந்நூலின் அரும்பெருஞ் சிறப்புப் புலனாகும்.

இந்நூலாசிரியர் நாவீறுபெற்ற நல்லிசைப் புலவராகலான், ஆங்காங்கே கற்பனைத்திறங்களும் சொன்னலம் பொருணலம் யாவும் ஒருங்கே கெழுமுமாறு புனையப்பெற்றுக் கற்றாரைத் தம்வழி ஈர்த்து இன்பத்தை ஈத்து அன்பும் அருளும் பிறக்க நல்லொழுக்கப் பண்பை நயக்கும் பண்பு மிக்கது; இடையிடையே கிளைக்கதைகளும், அறமுறைகளும், அறிவுரைகளும் பொதிந்து கிடப்பதால் கற்றார் நெஞ்சைக்கரைக்கும் பெற்றிமைமிக்கதாய்த் திகழுவ திந்நூலென்றால் மிகையாகாது.

இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் நல்லிசைப்புலமை வல்லுநரான கூலவாணிகன் சாத்தனாரால் அருளிச்செய்யப்பெற்றுச் சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகளால் கேட்கப்பெற்ற பெருமையுடையது. இதனை மணிமேகலைமேல் உரைப்பொருள் முற்றிய சிலப்பதிகார முற்றும் என ஆசிரியர் இளங்கோவடிகளார், சிலப்பதிகார நூற் கட்டுரைக்கண் உரைத்தலானும், ''இளங்கோவேந்தன் அருளிக்கேட்ப, வளங்கெழு கூலவாணிகன் சாத்தன், மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு'' என்று இந்நூல், காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்திருந்த ஏசாச்சிறப்பின் இசைவிளக்கு பெருங்குடி மாசாத்துவான் மகனான கோவலற்கு ஆடல் பாடல் அழகு என்றிம் மூவகைப் பண்பு முற்றும் நிறைந்த நாடகக்கணிகை மாதவிபால் தோன்றிய 'மணிமேகலை' என்னும் பெண்ணினல்லாளின் வரலாற்றை எடுத்துரைக்கும் பெற்றியுடையது.

இதன்கண் 'விழாவரை காதை' முதலாக 'பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதை' இறுதியாக முப்பது காதைகளால் மணிமேகலையாரின் வரலாற்றை எடுத்துச் செவ்வியமுறையில் விளக்கப்பெற்றுள்ளது.

prepp Your Personal Exam Guide

**144.** மணிமேகலைக் காப்பியத்தை ........................ இயற்ற; ...................... கேட்டனர் என இப்பகுதியில் சொல்லப்படுகிறது.

(1) உரையாசிரியர்; பேராசிரியர்

(2) சிவப்பிரகாச அடிகள், இளங்கோவடிகள்

(3) கூலவாணிகன் சாத்தனார், இளங்கோவடிகள்

(4) கூலவாணிகன், நல்லிசைப்புலவர்

**145.** மணிமேகலை என்ற காப்பியம் இவ்வகை பகுப்பில் அடக்கிக் காட்டப்படுகிறது

(1) விழுமிய நூல்

(2) அணிகெழு நூல்

(3) நுட்ப நூல்

(4) தொடர் நிலைச் செய்யுள்

**146.** மணிமேகலையில் பொதிந்து கிடப்பதெனக் கூறப்படுபவை :

www.prepp.in

(1) கற்பனைத்திறம், பொருணலம், இன்பம்

(2) கிளைக்கதைகள், அறமுறைகள், அறிவுரைகள்

(3) இன்பம், அன்பு, அருள், நல்லொழுக்கம்

(4) உரைப்பொருள், மூவகைப்பண்பு, காதைகள்

**147.** மாதவி ஒரு ......................., அவளிடம் ..................... , ................., ......................... என்ற ............ நிறைந்திருந்தன

(1) நாடகக்கணிகை, ஆடல், பாடல், அழகு, மூவகைப் பண்புகள்

(2) துறவி, அன்பு, அருள், நல்லொழுக்கம், பண்புகள்

(3) பெண்ணினல்லாள், அருள், அழகு, துறவு மூவகைப் பண்புகள்

(4) பெருங்குடி மகள், ஆடல், பாடல், ஆழகு, சிறப்புகள்

**148.** 'நல்லிசைப் புலமை' பிரித்தெழுதுக :

(1) நல்லிசை + புலமை

(2) நல் + லிசைப் + புலமை

(3) நல் + இசை + புலமை

(4) நல்லி + இசை + புலமை

**149.** திறம் என்பது ................ என்ற சொல்லுடனும் நலம் என்பது ................, .................... என்ற சொற்களுடனும் இணைந்து இப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

(1) புலமை, பண்பு, அறம்

(2) கற்பனை, சொல், பொருள்

(3) புனைவு, நுட்பம், நூல்

(4) அறம், பண்பு, அருள்

**150.** நயம், நலம் என்ற பண்புகள் இச்சொற்களுடன் இணைந்து வந்துள்ளன, காண்க.

(1) பண்பு, அணி

(2) சொல், பண்பு

(3) சொல், பொருள்

(4) பண்பு, பொருள்

www.prepp.in

Your Personal Exams Guide

Your Personal Exam Guide

*கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும் :*

www.prepp.in
Prepp
Your Personal Exams Guide

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும். விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் கறுப்பு/நீலம் பந்துருள் முனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர் தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத்தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர். விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருபதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்.
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வு இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடாது.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

## निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :

www.prepp.in

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर-पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉलपॉइंट पेन** से भरें। एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर-पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ। परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर-पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी।
5. परीक्षा पुस्तिका/उत्तर-पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाजिरी-पत्र में लिखें।
6. OMR उत्तर-पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी। इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्विच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए। इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर-पत्र दिए बिना एवं हाजिरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे। यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाजिरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर-पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा। **परीक्षार्थी अपने बाएँ हाथ के अँगूठे का निशान हाजिरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ।**
12. इलेक्ट्रॉनिक/हस्तचालित परिकलक का उपयोग वर्जित है।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं। अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर-पत्र का कोई भाग अलग न करें।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल/कक्ष छोड़ने से पूर्व उत्तर-पत्र निरीक्षक को अवश्य सौंप दें।** ***परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं।***

## READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY :

Prepp
Your Personal Exams Guide

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ballpoint Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet/Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the Examination Hall/Room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the Examination Halls/Rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his/her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his/her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic/Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall/Room.** ***The candidates are allowed to take away this Test Booklet with them.***